**கவனிக்க.**- *2010.12.31 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி (IV அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1688 - 2011 ජනවාරි මස 07 වැනි සිකුරාදා - 2011.01.07

*1688 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 4 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 8 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2011, சனவரி மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிரந்தர வான்படை

வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் கீழே தரப்பட்டுள்ள தொழில் துறைகளில், வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன.

1. **தொழில்துறையும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும் :**

(அ) *வானூர்தி பொறியியல் :*

(1) வானூர்தி இயந்திரவியலாளர் (ஆண்)
(2) வான் அமைப்பு எந்திரவியலாளர் (ஆண்)
(3) வானூர்தி மின்னியல் கருவிகள் எந்திரவியலாளர் (ஆண்)
(4) கருவிகள் பாதுகாப்பு உதவியாளர் (ஆண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

(ஆ) *மின்னணுவியலும் தொலைத்தொடர்பும் பொறியியல் :*

(1) வானொலி தொழினுட்பவியலாளர் (ஆண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

(2) கணனி தொழினுட்பவியலாளர் (ஆண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

(இ) *பொது பொறியியல் :*

(1) ஆயுத இயந்திரவியலாளர் (ஆண்)
(2) மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் (ஆண்)
(3) வான் படப்பிடிப்பாளர் (ஆண்)
(4) பொது இயந்திரவியலாளர் (ஆண்)
(5) வானூர்தி காய்ச்சிப் பொருத்தும் உதவியாளர் (ஆண்)
(6) மேற்பரப்பு தொழினுட்ப உதவியாளர் (ஆண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தி மேலதிக தகைமையாகும்.*

(ஈ) *சிவில் பொறியியல் :*

(1) மின்சார வேலையாளர் (ஆண்)
(2) பொறி வேலையாளர்/இயந்திர தொழினுட்ப உதவியாளர் (ஆண்)
(3) இயந்திர தொகுதி இயக்குனர் (ஆண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். ஆங்கில மொழியில் சித்தி பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகும்.*

(உ) *உபகரணம் :*

(1) வழங்குனர்/வழங்கல் உதவியாளர் (ஆண்/பெண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியும், கணிதம்/ விஞ்ஞானம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச்சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

(2) உணவக மேற்பார்வையாளர் (ஆண்/பெண்)
(3) உணவு வழங்கல் உதவியாளர் (ஆண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

(ஊ) *பரிபாலனம் :*

(1) எழுதுவினைஞர்/பரிபாலன உதவியாளர் (ஆண்/ பெண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம்/ விஞ்ஞானம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச்சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

(எ) *தொழிற்பாடுகள் :*

(1) வான் தொழிற்பாடுகள் (ஆண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தியும், ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

(2) தீயணைப்பாளர் (ஆண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

(3) உடற் பயிற்சியாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். தேசிய மட்டத்தில் விளையாட்டு தொடர்பான தகைமை கவனத்தில் கொள்ளப்படும்.

(4) நாய்களை கையாள்பவர் (ஆண்)
(5) பூமி தொழிற்பாட்டாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

(ஏ) பொலிஸ் :

(1) பொலிஸ் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கில மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

2. **ஏனைய தகைமைகள்**.- இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(அ) தேசிய இனம்.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது.- ஆண் - 2011.01.20 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 23 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பெண் - 2011.01.20 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) உயரம்.- ஆண் - 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும்

பெண் - 5 அடி 3 அங்குலமும் அதற்கு மேலும்

(ஈ) உடல் நிறை.- உயரத்திற்கேற்ற நிறை இருத்தல் வேண்டும்.

(உ) பார்வை வர்ணப்பதிவு மட்டம்.- CP2

(ஊ) தொலைபார்வை இரண்டு கண்களிலும்.- 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(எ) குடியியல் நிலை.- விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான்படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைவதுடன் தொழிற்பயிற்சியைப் பூர்த்திசெய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கு அனுமதி வழங்கப்படும்.)

3. பந்தி 01, 02 இல் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித் திறமைகளை நிறைவு செய்யாதவர்களுமான விண்ணப்பதாரர்கள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற் தகைமை மட்டத்தை கொண்டிராத விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள்.

4. விளையாட்டுத்துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் கவனத்திற் கொள்ளப்படும்.

5. **சேவை நிபந்தனைகள்**.- (அ) வான்படை வீரர்/வீராங்கனைகள் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான்படை ஒழுங்குவிதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்பட்டவர்களாவர்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் தொழில் துறைக்குரிய வான்படை வீரர்/வீராங்கனைகள் அடிப்படைப் பயிற்சியும் அதன்பின் தொழில்துறைப் பயிற்சியும் வழங்கப்பட்டு, அவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

6. **தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள்**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக 8 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளுமாறு கேட்கப்படுவார்கள். மேலும், 8 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 4 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவை யாற்றுதலானது மீண்டும் அழைக்கப்படும்போது சமுகமளிக்க வேண்டும். 8 ஆண்டுகள் கழிந்தபின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

7. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை அரசாங்கத்தின் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

8. **சம்பளமும் கொடுப்பனவுகளும்**.- (அ) ஒரு வருடத்திற்கு வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கு ஏற்புடையதாக திரட்டப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| வானூர்தியாளர் | - | ரூபா 1,68,000-6X1,440- 19X1,800- ரூபா 2,10,840 |
| முன்னணி வானூர்தியாளர் | - | ரூபா 1,70,880-4X1,440-19X1,800- ரூபா 2,10,840 |
| கோப்ரல் | - | ரூபா 1,75,200-1X1,440-10X1,800- 9X2,520-ரூபா 2,17,320 |
| சார்ஜன்ட் | - | ரூபா 1,80,240-3X1,800- 9X2,520- 3X3,480-ரூபா 2,18,760 |
| பிளைட் சார்ஜன்ட் | - | ரூபா 1,83,120-10X2,520-3X3,480- ரூபா 2,18,760 |
| அதிகாரம்பெற்ற அலுவலர் | - | ரூபா 2,11,800-13X3,480- ரூபா 2,57,040 |

மேற்குறிப்பிட்ட சம்பள திரட்டு விகிதங்களுக்கு ஏற்புடையதாக சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்படும். சேவைக்காலத்தில் அவரவர் நன்னடத்தை, சேவை ஆற்றல் ஆகியவற்றிற்கிணங்க உயர் நிலைகள் கிடைக்கப்பெறுவதுடன் அதற்கிணங்க வான்படை வீரர்/வீராங்கனை களுக்கு சம்பள விகிதங்கள் திருத்தப்படும்.

(ஆ) வேறு கொடுப்பனவுகள் :

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 5,250 ;

(2) கடினப்படி.- மாதமொன்றுக்கு ரூபா 600 ;

(3) கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு ரூபா 3,900 வழங்கப்படும் ;

(4) விசேட கடினப்படி.- விசேட கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 2,400 வழங்கப்படும் (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 80 வீதம் ;

(5) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு.- சேவைக்காலம் 5 வருடம் பூர்த்தியடைந்த பின் இக்கொடுப்பனவு வழங்கப்படும் (மாதமொன்றுக்கு ரூபா 250 இல் இருந்து ரூபா 850 வரை) ;

(6) உணவுக் கொடுப்பனவு.- வெளியில் தங்கும் வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கு மாதமொன் றுக்கு ரூபா 9,262.20 (உள்ளே தங்கும் வான்படை வீராங்கனைகளுக்கு இலவச உணவு வசதி) ;

(7) தங்குமிட வசதி.- உள்ளே தங்கும் வான்படை வீரர்/ வீராங்கனைளுக்கு இலவசம் ;

(8) பிரயாணம்.- ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பயணச்சீட்டுகள் (வீரர்/ வீராங்கனைகளுக்கும்/ கணவருக்கும் பிள்ளை களுக்கும்). உள்ளே தங்கிருக்கும் வான்படை வீரர்/ வீராங்கனைகளுக்கு மாதமொரு தடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு ;

(9) கலவர காலப்படி.- நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போது இக்கொடுப் பனவு வழங்கப்படும் (விவாகமானவர், விவாகமாகாத வர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்) ;

(10) தகைமைச் சம்பளம்.- விசேட பயிற்சிநெறியில் தகைமை பெற்றவர்களுக்கு அல்லது வான்படைச் சேவைக்கு விசேட பெறுமதிவாய்ந்த தகைமை கொண்டிருப்பவர்களுக்கு இத்தகைமைச் சம்பளம் வழங்கப்படும். மாதமொன்றுக்கு ஆகக்கூடிய தொகை ரூபா 637.50 வழங்கப்படும் ;

(11) நன்னடத்தைப் பதக்கம் சம்பளம்.- மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாதமொன்றுக்கு ரூபா 30 இல் இருந்து ரூபா 204 வரை வழங்கப்படும் ;

(12) சீருடைக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 170 வழங்கப்படும் ;

(13) மீள அமர்த்தலுக்கான சம்பளம்.- மீள அமர்த்தப்பட்ட காலப்பகுதியின்போது மாதமொன்றுக்கு ஆளணி யினர் 300 ரூபாவுக்கு உரித்துடையவராவர் ;

(14) மருத்துவம்.- வான்படையின் செலவில் வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கும் திருமணமாயின் அவர் களது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும் ;

(15) வெளியில் தங்கியிருப்பவர்களுக்கு வேலைத்தளத் திலிருந்து 30 மைல் (கி. மீ. 48) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீரர்/வீராங்கனை களுக்கு இ. போ. ச. பேரூந்து வண்டிகளில் வேலைக் கென இலவசமாக பிரயாணச் சீட்டு வழங்கப்படும் ;

(16) விவாகமான வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கு அரசாங்கத்திற்குரிய விவாகமானவர்களுக்கான விடுதியில் குடியிராவிடில் மாதமொன்றுக்கு ரூபா 1,200 இல் இருந்து 3,300 வரை வாடகைப்படியொன் றுக்கு உரித்துடையவராவர் ;

(17) விரிவுரையாளர் கொடுப்பனவு.- மாதமொன்றுக்கு ரூபா 425 இல் இருந்து ரூபா 510 வரை கொடுப்பன வுக்கு உரித்துடையவராவர் ;

(18) வேறு கொடுப்பனவுகள்.- (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்) இலங்கை வான் படைச் சம்பள சட்டதிட்டங்களுக்கு அமைய இக்கொடுப் பனவு வழங்கப்படும் ;

(19) ஓய்வூதியங்கள்/ பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்கு காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை வீரர்/வீராங்கனைகள் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

9. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்துதல்கள்.**- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விபரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும்.

(ஆ) அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/சபையின்/குடியியல் தாபனத்தின் தலைமை யதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப் பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா).

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ்.

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழில்துறை/தொழில்நுட்பப் பயிற்சி அத்துடன்/அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ்.

(4) இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பதாரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்புவாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பதாரரின் தொழில்தருநரிடமிருந்து (தொழில் புரிபவராயின்).

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலியவற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பக்காரர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டா.

10. நேர்முகப் பரீட்சை, இலங்கை வான்படை ஏக்கல நிலையத்தில் ஆண் விண்ணப்பதாரிகளுக்கு 2011, சனவரி 10, 11, 12 மற்றும் 13 ஆந் திகதிகளிலும் பெண் விண்ணப்பதாரிகளுக்கு 2011, சனவரி 17, 18 ஆந் திகதிகளிலும் மு. ப. 9.00 மணி தொடக்கம் பி. ப. 1.00 மணிவரை நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்குத் தகுந்தவரெனக் கருதப்படும் விண்ணப்பதாரர்கள் விமானப்படை ஆள்திரட்டற் சபையொன்றின் முன்னிலையில் தங்கள் சொந்தச் செலவில் நேர்முகப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும்.

11. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பதாரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பதாரரும் தேசிய அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்.

12. தங்கள் இறுதி நேர்முகப் பரீட்சைகளையடுத்து பொருத்தமானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பதாரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர். (உடற்பயிற்சியாளர், இசைக்கலைஞர்கள் செய்கை பரீட்சைக்கு தோற்றுவிக்கப்படுவர்) பொருத்தமான விண்ணப்பதாரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வுசெய்யப்படுவர்.

13. விண்ணப்பதாரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பதாரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தணித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகைமையிழக்கச் செய்யும்.

14. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பதாரரை ஆளாக்கிவிடும்.

15. நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

டபிள்யூ. டி. ஆர். எம். ஜே. குணதிலக்க,
எயார் சீப் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. இல. 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

வான்படை வீரர்/வீராங்கனைகளுக்குமான .................... பதவி

1. முழுப்பெயர் (தேசிய அடையாள அட்டைப்படி) :----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

3. விண்ணப்பிக்கும் தொழில்துறை :----.

4. அஞ்சல் முகவரி :----.

5. நிரந்தர முகவரி :----.

6. நிரந்தர முகவரியின் பொலிஸ் நிலையம் :----.

7. மாவட்டம் :----.

8. தேர்தற் தொகுதி :----.

9. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

10. தொலைபேசி இலக்கம் :----.

11. பிறந்த திகதி :----.

12. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

13. உயரம் :

அடி .................... அங்குலம் ................

14. க. பொ. த. (சா. த.) பரீட்சை :

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

15. க. பொ. த. (உ. த.) பரீட்சை :

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

16. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் (தொழிநுட்பம், தொழிற்பயிற்சி அனுபவம் முதலியன) :----.

17. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விபரம் :----.

18. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் :----.

19. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விபரங்கள் தரவும் :----.

20. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ? :----.

21. நற்சாட்சிப்பத்திரங்கள் பற்றிய விபரங்கள் :

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |

22. விண்ணப்பதாரரால் கையொப்பமிடவேண்டிய வெளிப்படுத்துகை :

மேலேயுள்ள வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என் மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப் பட்ட இலங்கை நிரந்தர வான்டையில் வான்படை வீரராக தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக்குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

1-117

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**நிதி, திட்டமிடல் அமைச்சு**

இலங்கை சுங்கத் திணைக்களம்

**இலங்கை சுங்கத் திணைக்களத்தின் II ஆம் தர சுங்க உதவி அத்தியட்சகர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2010**

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் II ஆம் தர சுங்க உதவி அத்தியட்சகர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சையொன்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2011, ஏப்பிறல் மாதத்தில் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதியானது பத்திரிகைகள் மூலம் உரிய காலத்தில் அறிவிக்கப்படும். இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை நிதி, திட்டமிடல் அமைச்சு கொண்டுள்ளது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இருபாலாரிடமிருந்தும் இப்பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. தகைமைகள் :**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தாம்-

(அ) இலங்கைப் பிரசையாகவும்;
(ஆ) மிகச் சிறந்த ஒழுக்கமுடையவராகவும்;
(இ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதுக்கு குறையாதவராகவும் 28 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ii) உடற் தகைமைகள்.- ஆண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 5 அங்குலத்துக்கு குறையாமலும் மார்புச் சுற்றளவு (விரிவடைந்த நிலையில்) 33 அங்குலங்களுக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

பெண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 3 அங்குலங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

(iii) கல்வித்தகைமைகள்.- விண்ணப்பதாரிகள் பின்வரும் கல்வித் தகைமைகளை உடையவர்களாக இருத்தல் வேண்டும் :-

(அ) அங்கீகரிக்கப்பட்டதொரு பல்கலைக்கழகத்தில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் ; அத்துடன்

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில மொழியில் ஆகக்குறைந்தது திறமைச் சித்தியினைப் பெற்றிருத்தல் வேண்டும். விருப்பத்துக்குரிய பாடமான ஆங்கில மொழியானது கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது ; அல்லது

கல்விப் பொதுத்தராதர (உயர் தர) சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- பட்டப் பரீட்சையொன்றின் பெறுபேற்றிற்காக காத்திருக்கும் எந்தவொருவரும் இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவராக மாட்டார். எனினும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப் பரீட்சையில் சித்தியடைந்த ஆளொருவர் அப்பட்டப் பரீட்சையில் சித்திபெற்றுள்ளார் என்ற விடயம் அடங்கிய உத்தியோகபூர்வ கடிதமொன்றை பல்கலைக்கழக பதிவாளரிடமிருந்து பெற்று அதைச் சமர்ப்பிக்குமிடத்து அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படலாம்.

*3*. **சேவை நிபந்தனைகள்** :

(i) *வேதனம்*.- இப்பதவிக்கான திரட்டிய மாதாந்த வேதன அளவுத்திட்டம் வருமாறு.-

ரூபா 16,720-320x10-365x11-450x15= ரூபா 30,685 (பொது நிருவாக சுற்றறிக்கை இல. 6/2006 (IV)-எம். என். 5-2006எ)

(ii) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்குரியது என்பதுடன் விதவைகள்/அநாதைகள் ஓய்வூதியத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(iii) சித்திபெற்று தெரிவாகும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகாலப்பகுதிக்கு தகுதிகூர் நிலையில் வைக்கப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

(iv) நியமனத்தர்கள் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றக் கூடிய உடல்நிலை தகுதியினை உடையவர்கள் என்பதை பரீட்சிப்பதற்காக அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரினால் நடாத்தப்படும் மருத்துவ பரீட்சைக்கு உட்படுதல் வேண்டும்.

(v) நியமனத்தர்கள் இத்தீவின் எப்பாகத்திலும் இரவிலும் பகலிலும் சேவையாற்றுவதற்கு பிணிக்கப்பட்டுள்ளார்கள்.

(vi) அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் பகுதி I : தொகுதி (IIஅ) ஆம் பிரிவின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு கவனம் கோரப்படுகின்றது.

*4*. ***பரீட்சைத் திட்டம்***.- ஆட்சேர்ப்புக்கான பரீட்சைத்திட்டம் வருமாறு :-

| | | புள்ளிகள் |
|---|---|---|
| (i) | உளச்சார்புப் பரீட்சை (1 மணித்தியாலம்) | 100 |
| (iii) | ஆங்கில மொழி (1 1/2 மணித்தியாலங்கள்) | 100 |
| | மொத்தம் | 200 |

*உளச்சார்புப் பரீட்சை வினாத்தாள்*.- இவ்வினாத்தாளானது மொழித் தேர்ச்சி, கணித அறிவு, தர்க்க ரீதியான அறிவு என்பவற்றை பரிசோதிப்பதற்கான கேள்விகளைக் கொண்டிருக்கும்.

*ஆங்கில மொழி வினாத்தாள்*.- விண்ணப்பதாரிகளது வாசிப்பு, எழுத்து, கிரகித்தல் மற்றும் தொடர்பாடல் திறன்களை பரிசோதிப்பதற்காக தயாரிக்கப்பட்டதாக இருக்கும்.

**குறிப்பு**.- இப்பரீட்சையானது சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். இந்த அறிவித்தலின் பந்தி 2 (iii) இல் குறிப்பிடப்பட்ட தகைமை பரீட்சையில் சித்திபெற்ற மொழியிலேயே விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற வேண்டும். (அதாவது- சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்) ஆயினும் தகைமை பரீட்சையை ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியில் சித்திபெறும் ஒரு விண்ணப்பதாரி அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியில் கல்விகற்ற ஒரு விண்ணப்பதாரி தாம் விரும்பினால் இப்பரீட்சைக்கு சிங்கள மொழியில் தோற்றலாம். பரீட்சார்த்தி விண்ணப்பத்திற் கொடுத்த பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டார்.

(i) தெளிவற்ற எழுத்துக்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். தெளிவற்ற எழுத்தில் விடையெழுதும் விண்ணப்பதாரி தகைமை நீக்கம் செய்யப்படக் கூடும்.

(ii) தகைமையுடைய விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகளானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பிவைக்கப்படும். ஆனால் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான எல்லாவித தகைமைகளையும் பெற்றுள்ளார் என கருதுதல் ஆகாது.

(iii) *மதிப்பிடுகை*.- ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 60% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு இணங்க மொத்தத்தின் இறங்குவரிசையில் முதற்கட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். முதற்கட்ட நேர்முகப் பரீட்சையில் விளையாட்டு திறமைகளுக்காக ஆகக்கூடியது 10 புள்ளிகள் வழங்கப்படும். அதன் பின்னர் பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும். இதன்போது எவ்வித புள்ளிகளும் வழங்கப்பட மாட்டாது. பரீட்சைகளில் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளும் மற்றும் முதற்கட்ட நேர்முகப் பரீட்சையில் வழங்கப்பட்ட புள்ளிகள் மாத்திரம் கவனத்திற்கொள்ளப்படும்.

*முதற்கட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறை* :

*வலய மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்*.- முதலாமிடத்திற்கு 3 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 2 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 1 புள்ளி.

*மாவட்ட மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்*.- முதலாமிடத்திற்கு 4 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 3 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 2 புள்ளிகள்.

*தேசிய மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்*.- முதலாமிடத்திற்கு 5 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 4 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 3 புள்ளிகள்.

*வலய மட்டத்தில் குழு விளையாட்டுக்கான புள்ளிகள்*.- முதலாமிடத்திற்கு 3 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 2 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 1 புள்ளி.

*மாவட்ட மட்டத்தில் குழு விளையாட்டுக்கான புள்ளிகள்*.- முதலாமிடத்திற்கு 4 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 3 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 2 புள்ளிகள்.

*தேசிய மட்டத்தில் குழு விளையாட்டுக்கான புள்ளிகள்*.- முதலாமிடத்திற்கு 5 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 4 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 3 புள்ளிகள்.

5. **தெரிவுமுறை அடிப்படை அல்லது தேர்ந்தெடுக்கும் முறை**.- எழுத்துப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கு நியமனம் அளிப்பதற்கு தெரிவுசெய்யப்படுவர்.

நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களில் 10% பெண் விண்ணப்பதாரிகளுக்கு ஒதுக்கிவைக்கப்படும்.

**குறிப்பு**.- சுங்கத் திணைக்களத்தினது வேலைகளுக்கேற்ப பெண் அலுவலர்களும் இரவு வேளையில் கடமைபுரிய வேண்டியிருக்கும்.

6. விண்ணப்பதாரர் (ஆண்/பெண்) ஒவ்வொருவரும் பரீட்சைக்குரிய விண்ணப்பத் திகதி முடிவுறுவதற்கு முன்னர் சகல தேவைப்பாடு களையும் பூர்த்திசெய்திருக்க வேண்டுமென்பது கட்டாயமானதாகும்.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- (i) இந்த அறிவித்தலின் இறுதியில் மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தாம் பரீட்சை எழுதுவதற்கு உத்தேசித்துள்ள மொழிமூலத்தில் தாமாகவே விண்ணப்பங்களை இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயாரித்து சொந்த கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தினது ஒவ்வொரு கூட்டிலும் அறிவுறுத்தலுக்கிணங்க விண்ணப்ப தாரர்களால் நிரப்பப்பட வேண்டியதுடன் ஏதாவது கூட்டினுள் பொருத்தமற்றவை இருப்பின், அத்தகைய கூட்டினுள் "பொருத்தமற்றவை" என்ற பதம் எழுதப்படல் வேண்டும். கண்டிப்பாக கவனிக்கப்படவேண்டியது யாதெனில், விண்ணப்பத்தில் கூடுகள் நிரப்பப்படாது விடுதலானது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கான காரணமாக இருக்கும். (விண்ணப்பங்களானது ஏ4 அளவிலான தாளில் தயாரித்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்தில் 1 தொடக்கம் 6 வரையான தலைப்பு இலக்கங்கள் முதல் பக்கத்திலும் 7 தொடக்கம் 11 வரையிலானவை இரண்டாவது பக்கததிலும் மீதியானவை மூன்றாவது பக்கத்திலும் வரும் விதம் தயாரித்தல் வேண்டும்.). சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல மாதிரி விண்ணப்பங்களில் பரீட்சையின் தலைப்பானது ஆங்கிலத்திலும் எழுதப்பட்டி ருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்களானது "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பரீட்சைகள் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, பெலவத்த, பத்தர முல்லை" என்ற விலாசத்திற்கு 2011.02.07 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின் பெறப்படும் எந்தவொரு விண்ணப்பப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

(iii) பரீட்சைக் கட்டணமாக ரூபா 400 இனை ஏதாவது மாவட்ட/ பிரதேச செயலக அலுவலகத்தில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 ஆம் இலக்க வருமான தலைப்பின் கீழ் வரவு வைப்பதற்காக செலுத்தப்படலாம். பற்றுச்சீட்டானது விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டியதுடன் விண்ணப்பதாரர்கள் பற்றுச்சீட்டின் படப்பிரதி யொன்றினை தம்மிடம் வைத்துக்கொள்ள ஆலோசனை வழங்கப்படு கின்றது. இக்கட்டணமானது எச்சந்தர்ப்பத்திலும் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

(iv) அரசாங்க திணைக்களங்களில் அல்லது சபைகளில் அல்லது கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள், தற்போது தாங்கள் சேவையாற்றும் திணைக்களங்கள் அல்லது நிறுவனங்களின் தலைவர்களினூடாக தங்களது விண்ணப் பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை 2011.02.07 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினை சென்றடைய வேண்டுமென்ற வேண்டு கோளுடன் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் திணைக்கள அல்லது நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் தனிப்பட்ட முறையில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கோ அல்லது திணைக்களத்தைச் சேர்ந்த வேறு எவரேனும் உத்தியோகத்தருக்கோ அனுப்பப்படலாகாது. இத்திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவை அத்திணைக்களங்களுக்கூடாக அனுப்பப்பட்டாலும் கூட அவைகள் நிராகரிக்கப்படும். அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பத்தில் திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவர் விண்ணப்பதாரரது கையொப்பத்தினை உறுதிப்படுத்தி அவரது கையொப்பம், அலுவலக முத்திரை என்பன இடப் படாதவிடத்து அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(v) உறுதிப்படுத்துதல்.- அரசாங்க சேவையிலுள்ள ஒரு விண்ணப்பதாரியின் கையொப்பமானது அவரது திணைக்களத் தலைவரினால் அல்லது அவரது சார்பில் அதிகாரப்படுத்தப்பட்ட அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரரின் கையொப்பங்கள் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதாவது சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க பாடசாலை அதிபர் அல்லது பணிப்பாளர் நிர்வகிக்கப்படும் பாடசாலை, கடற்படை, வான்படை அல்லது தரைப்படை அதிகாரமுடைய அதிகாரி, ரூபா 2,40,360 அல்லது அதற்குமேல் வருடாந்த சம்பளமுள்ள நிரந்தர அரசாங்க அலுவலர், பௌத்த ஆலயமொன்றின் பிரதம குரு அல்லது உயர்மத குரு அல்லது ஏதாவது வழிபாட்டுத்தலமொன்றுக்கு பொறுப்பாகவுள்ள அல்லது முக்கிய பதவி வகிப்பவர்.

8. **பரீட்சைக்கு அனுமதியளித்தல்**.- விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்புவார். பரீட்சைகளுக்கென தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டைகளை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாகுதல் வேண்டும்.

பரீட்சார்த்தி அவரவர்க்கென ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தி லேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். தமக்கென ஒதுக்கப்படாத பரீட்சை மண்டபத்துக்கு செல்லும் பரீட்சார்த்திகளுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், பரீட்சை ஆரம்பமாகும் நாளன்று பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையினை கையளித்தல் வேண்டும்.

பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் ஒழுங்குவிதிகளும் இவ்வர்த்த மானியின் பகுதி I : தொகுதி II (அ) இல் வேறாக தரப்பட்டுள்ளன. இந்த விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர்.

பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றினை வெளியிடும். அவ் அறிவித்தல் வெளியாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு என்பவற்றின் உறுதிப்படுத்திய நிழற்பட பிரதிகள், பதிவுசெய்த பற்றுச்சீட்டு, கொழும்பின் வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கம், குறிப்பிட்ட உங்களது கோரிக்கை கடிதம் என்பவற்றை தம்வசம் வைத்துக்கொண்டு பரீட்சைகள் திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

9. **அடையாள அட்டைகள்**.- பரீட்சார்த்திகள் அவர்களது அடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;

(ஆ) பரீட்சைத் திகதிக்கு முன்பதாக ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாது வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்கூறப்பட்டவாறான ஆவணமொன்றினை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தத் தன்மை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் நிராகரிக்கப்படலாம்.

10. **தகைமை ஆவணங்கள்**.- (i) விண்ணப்பத்துடன், பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்பட்ட காசுக்கட்டளை தவிர்ந்த பிற ஆவணங்கள் எதுவும் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது. ஆனால் விதித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தேவையான விபரங்கள் விண்ணப்பத்தில் தரப்பட்டிருத்தல் வேண்டும். இந்த முறையில் சகல அம்சங்களிலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பமானது அதன் தகுதிகளின் பேரில் தீர்மானிக்கப்பட்டு நிராகரிக்கப்படலாம்.

(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் தகுதிபெற்ற பரீட்சார்த்திகள் தமது தகைமைகளை நிரூபிப்பதற்கான ஆவணச்சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் தேவைப்படும்.

(iii) (அ) பொறுப்புள்ள ஆளொருவரினால் ஒப்பமிடப்பட்ட குணநலச் சான்றிதழ்.

**குறிப்பு**.- இத்தகைய குணநலச் சான்றிதழானது சமாதான நீதவான், வழங்கறிஞர், வதிவிட பிரதேச செயலாளர் அல்லது ஆண்டொற்றிற்கு ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை திரட்டிய சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது பொதுவாக நன்கு தெரிந்தவர்கள் இலகுவாக சிபாரிசு பெற்றுக் கொள்ளக்கூடியதுமான ஒருவரால் பெறப்படலாம். இத்தகைய உறுதிப்படுத்துபவரது பெயர், பதவி, முகவரி என்பன சான்றுப் படுத்தலில் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பரீட்சார்த்திகளின் விடயத்தில் அவர்கள் குணநலச் சான்றிதழ்களை சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட மாட்டார்கள்.

(iii) (ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவினது சான்றுப்படுத்தப்பட்ட ஒரு பிரதி அல்லது பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வயது பற்றிய ஒரு விசேட சான்றிதழ் (பிறப்பு பதிவுசெய்யப்படாத பரீட்சார்த்திகளது விடயத்தில்)

**குறிப்பு**.- (I) பாடசாலை அல்லது கல்வித் தேவைகளுக்கென வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து எடுக்கப்பட்ட சான்றுபடுத்தப்பட்டதொரு பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(II) பிறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக நம்பிக்கை உறுதிப் பத்திரங்களோ அல்லது ஞானஸ்நான சான்றிதழ்களோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

பரீட்சார்த்தி சாதாரணமாக பயன்படுத்தும் பெயர் அல்லது பெயர்களிலிருந்து பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயர் அல்லது பெயர்கள் வேறுபடின் அல்லது பரீட்சைக்கு விண்ணப்பதாரி தோற்றும் பெயர் வேறுபடின் பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின் (அத்தியாயம் 110) 27 ஆம், 28 ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கு அமைய பிறப்புப் பதிவிலுள்ள பெயரை திருத்துவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்.

(iii) இலங்கைப் பிரசை என்ற பதிவுச்சான்றிதழ் அல்லது வம்சாவளிப் பிரசாவுரிமைக்கான கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட மூல உத்தியோகபூர்வ கடிதம் (ஏற்புடையதாயின்)

(iv) கல்வித் தகைமை மூலச்சான்றிதழ்கள் அல்லது அத்தகைய சான்றிதழ்கள் வழங்கப்படாதவிடத்து ஏனைய உத்தியோகபூர்வ ஆவணங்கள், அதாவது பல்கலைக்கழக பதிவாளர் ஒருவரினால் விண்ணப்பதாரி பட்டப்பரீட்சையில் சித்திபெற்றுள்ளார் என்ற உத்தியோகபூர்வ கடிதம், பரீட்சைகள் திணைக்களத்தினால் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச்சித்தி அல்லது கல்விப் பொதுத்தராதர (உயர் தர) சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியினை அவர் பெற்றுள்ளார் என்பதனை குறிப்பிட்டு வழங்கப்பட்ட அப்பரீட்சையின் பெறுபேற்றுத்தாள்.

(v) வலய/மாவட்ட/தேசிய விளையாட்டு போட்டிகளில் பெற்றுக் கொண்ட நிரூபண ஆவணம்.

(vi) விண்ணப்பத்தினை அனுப்புகின்ற சமயத்தில் சகல தேவையான ஆவணங்களையும் தயாராக வைத்திருக்கும்படி பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றனர். தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற அல்லது தேவையான சந்தர்ப்பத்தில் அவற்றைச் சமர்ப்பிப்பதில் தாமதங்களை ஏற்படுத்துகின்ற பரீட்சார்த்திகள் இப்பதவிக்கான நியமனத்திற்கு தகுதியற்றவர்களாவர்.

11. **தவறான தகவல்களை சமர்ப்பிப்பதற்கான தண்டனை**.- இப்பரீட்சைக்கான ஒழுங்குவிதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் அதற்குத் தோற்றுவதற்கு தகைமை அற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படலாம்.

பரீட்சைக்கு விண்ணப்பதாரி ஒருவரினால் தரப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏதேனும், அவரது அறிவுக்கு எட்டியவரையில் தவறானவை என அல்லது வேண்டுமென்றே விபரங்களைத் தரவில்லையென காணப்படின் அல்லது அவரது சேவைக் காலத்தின் எக்காலப்பகுதியிலேனும் அவர் பரீட்சைக்குத் தோற்றும் தகைமையற்றவர் என நிரூபிக்கப்படின் அவர் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவார்.

இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணக்கமாக இல்லாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. இந்த ஒழுங்குவிதிகளில் கவனிக்கப்படாத ஏதேனும் விடயம் நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரது தற்றுணிபின்படி கையாளப்படும்.

செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சு.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
செயலகம்,
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை சுங்கத் திணைக்களத்தின் சுங்க உதவி அத்தியட்சகர் II ஆம் தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010**

OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO POSTS OF ASSISTANT SUPERINTENDENT OF CUSTOMS, GRADE II OF SRI LANKA CUSTOMS DEPARTMENT - 2010

(அலுவலக பாவனைக்கு மாத்திரம்)

நீர் இப்பரீட்சையில் தோற்றுவதற்கான மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

1. விண்ணப்பதாரரின் பெயர் :----.
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) உதாரணம் :- SILVA, B.A :----.
   1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழ்/ஆங்கிலம்) :----.
   1.3 முதலெழுத்துக்களால் குறிக்கும் பெயர்கள் (ஆங்கிலம்) பெரிய எழுத்துக்களில்) :----.

   சிங்களம்/தமிழில் :----.

2. நிரந்தர வதிவிட விலாசம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
   அனுமதி அட்டை அனுப்புவதற்கான விலாசம் :----.

3. தேசிய அடையாள அட்டையினது விபரங்கள் :-

   3.1 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

   3.2 வழங்கப்பட்ட திகதி :-

4. பால் :
   ஆண் - 0
   பெண் - 1
   (கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

5. நீங்கள் இலங்கைப் பிரஜையா இல்லையா என்பதைக் குறிப்பிட வும் :-

   வம்சாவழி மூலம் - 1
   பதிவு மூலம் - 2
   (கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

6. இனம் :
   சிங்களம்-1, இலங்கைத் தமிழ்-2, இந்தியத் தமிழ்-3, முஸ்லிம்-4, பறங்கியர்-5, ஏனையோர்-6
   (கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

7. (அ) பிறந்த திகதி :

   ஆண்டு | மாதம் | திகதி

   (ஆ) விண்ணப்பம் முடிவுத் திகதியன்று வயது :

   வருடங்கள் | மாதங்கள் | நாட்கள்

8. உடற்தகைமை தேவைப்பாடுகள் :

   (i) உயரம் : .......... அடி .......... அங்குலம்
   (ii) மார்புச் சுற்றளவு (விரிவடைந்த நிலையில்) : ............ அங்குலங்கள்
   (ஆண் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

9. நீர் ஏதாவது குற்றச்செயலுக்காக எப்பொழுதாவது நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா ? (ஆம்/இல்லை) :----.

   ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடவும் :----.

10. கல்வித் தகைமைகள் :

| பல்கலைக் கழகத்தினது பெயர் | பட்டம் | பட்டத்தினது தன்மை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

   (i) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) சான்றிதழ் பரீட்சை யில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியினை பெற்றுள் ளீரா ? (ஆம்/இல்லை) :-

   பரீட்சையின் வருடம் :----.
   சுட்டிலக்கம் :----.

(ii) கல்விப் பொதுத்தராதர (உயர் தர) சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியினைப் பெற்றுள்ளீரா ? (ஆம்/இல்லை) :- ☐

பரீட்சையின் வருடம் :----.
சுட்டிலக்கம் :----.

11. பரீட்சைக் கட்டணம் (பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்) :

| |
|---|
| மாவட்ட/பிரதேச செயலாளர் அலுவலகம் : |
| பற்றுச்சீட்டு இலக்கம் : |
| திகதி : |

(இந்த விபரங்கள் கட்டாயமாக கொடுக்கப்படல் வேண்டும்.)

12. **விண்ணப்பதாரியின் உறுதியுரை.-**
இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகிறேன். இவற்றில் அடங்கியுள்ள விபரங்களில் ஏதேனும் பொய்யானவை அல்லது தவறானவை எனக் காணப்படின் தெரிவுக்கு முன்னராயின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் அல்லது தெரிவின் பின்னரோ பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் கடப்பாடுடையவனாவேன். மேலும் பரீட்சை நடத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினது சட்டவிதிகளுக்கமைய நான் நடந்துகொள்வேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

13. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் (பொருத்தமற்றதை வெட்டிவிடவும்.) :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................ என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும். இத்திணைக்களத்தில்/சபையில்/கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றுபவராக இருக்கின்றார் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் 2011, .................. ஆந் திகதி இடப்பட்டது என்பதையும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டானது இணைக்கப்பட்டுள்ளது எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

நியமனத்துக்காக அவர் தெரிவுசெய்யப்படின் இத்திணைக்களத்திலிருந்து/சபையிலிருந்து/கூட்டுத்தாபனத்திலிருந்து அவரை விடுவிக்க முடியும்.

----,
உறுதிப்படுத்துபவரது கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரது முழுப்பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

***குறிப்பு.-*** வர்த்தமான பத்திரிகையின் 7 (V) ஆம் பந்தியில் குறிப்பிட்டதொரு நபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

1-92

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2010 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை - 2011**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 07.01.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.12.2010 |
| | | வெள்ளி | 14.01.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.12.2010 |
| | | வெள்ளி | 21.01.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.01.2011 |
| | | வெள்ளி | 28.01.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.01.2011 |
| **பெப்புருவரி** | .. | வியாழன் | 03.02.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.01.2011 |
| | | வெள்ளி | 11.02.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.01.2011 |
| | | வெள்ளி | 18.02.2011 | .. | நண்பகல் 12 | வியாழன் | 03.02.2011 |
| | | வெள்ளி | 25.02.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.02.2011 |
| **மார்ச்சு** | .. | வெள்ளி | 04.03.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.02.2011 |
| | | வெள்ளி | 11.03.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.02.2011 |
| | | வெள்ளி | 18.03.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.03.2011 |
| | | வெள்ளி | 25.03.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.03.2011 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.